[26th March 1969

திரு வி. தங்கபாண்டியன். தலைவர் அவர்களே, அந்தக் கால்வாயை நாராயணன் கால்வாய் என்றும் சொல்வதுண்டு. அப்படி அந்த நாராயணன் கால்வாய்த் திட்டம் பற்றிய கோரிக்கை அந்தப் பகுதி மக்களிடமிருந்து அரசுக்கு வந்ததா? அது குறித்து செயல்குறிப்பு ஏதேனும் அமைத்து நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நாராயணன் கால்வாய் திட்டத்திற்கு ரூ. 10·25 லட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் 5 பகுதியில், 3 பகுதிகள் குறித்த வேலையில் ரூ. 5·41 லட்சம் செலவாகி முடிந்திருக்கிறது. எஞ்சிய பகுதியில் உள்ள நிலச் சொந்தக்காரார்கள் மறுப்பு தெரிவித்திருப்பதால் அது முடிவான பிறகு, மீண்டும் வேலை தொடங்கும்.

Sub-Inspector, Dindigul.

* 228 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any resclution was passed at the Dindigul Municipal Council meeting held in February 1968 and sent to the Tamil Nadu Government to reprimand and take action against the Taluk Sub-Inspector for having spoken in a derogatory manner of the Councillor Thiru Rajayya; and

(*b*) if so, the action taken thereon ?

திண்டுக்கல் சப்-இன்ஸ்பெக்டர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் நகரசபைக் கூட்டத்தில் 1968 பிப்ரவரி மாதம் நகரசபை உறுப்பினர் திரு ராஜய்யாவை தாலூக்கா சப்-இன்ஸ்பெக்டர் தரக் குறைவாகப் பேசியதைக் கண்டித்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தீர்மானம் நிறைவேற்றி தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி . (அ) and (இ) மேலவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பெற்றுள்ளது.

Community Development Reorganisation

* 229 *Q.*—THIRU V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the action taken on Thiru Murugesa Mudaliar's Report on the Community Development Reorganisation ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU V. ISVARMURTI : When Thiru Murugesa Mudaliar's Report was released, there was a report to the effect that the Government would retrench the panchayat union staff and make a reorientation of financing the farmers through Land Mortgage Banks and use the revenue staff. The Panchayat Union staff have, in fact, become surplus. May I know whether the Government

* Printed as Appendix on page 62.